**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.**

**முன்னிலை: திருமதி.M.பிரவீணா, M.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
**உத்தமபாளையம்.**
2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண். 171/2023**
(Original Suit CNR No. TNTH06-000-218-2023)

1. ரமா
2. சாய்ராம் . . .வாதிகள்

// எதிராக //

1. முத்து என்ற முத்துகிருஷ்ணன்
2. நாகராஜன்
3. மணிமாறன்
4. சார்பதிவாளர் , சின்னமனூர்
5. மாவட்ட பதிவாளர் , பெரியகுளம்
6. மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி . . .பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 04.07.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.பாஸ்கரன், B.A.,B.L., அவர்களும், 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சூர்யநாராயணன் அவர்கள் ஆஜராகியும், 3 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.பூபேஸ்கண்ணன் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆஜராகியும், போதிய வாய்ப்பு கொடுத்தும் 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய முன்வராத காரணத்தினால், மேற்படியார்கள் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு எதிராக 22.02.2024 தேதியில் ஒருதலைபட்ச உத்தரவானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்

## தீர்ப்புரை

தாவா 1வது லக்க சொத்தினை பொறுத்து இவ்வழக்கு 1,2 பிரதிவாதிகள், இவ்வழக்கு 3ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தியுள்ள 15.06.2023ம் தேதியிட்ட கிரைய ஆவணமானது தாவா சொத்தினை பொறுத்து இவ்வழக்கின் வாதிகளின் உரிமையினையும், அனுபவத்தினையும் எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது, இல்லாநிலையது மற்றும் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா 1,2 லக்க சொத்துக்களை பொறுத்து இவ்வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகளால் ஏற்படுத்தப்படும் தாவா வழக்குரை சொத்தினை பொறுத்த ஒத்தி, கிரையம், ஈடு போன்ற வில்லங்களை இவ்வழக்கின் 4ம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு செய்திட கூடாதென இவ்வழக்கின் 4ம் பிரதிவாதியின் மீது ஒரு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இவ்வழக்கின் செலவுத் தொகை கோரியும் தாவா தாக்கல்.

**2. வழக்குரையின் சுருக்கம்**

தாவா வழக்குரை சொத்தும், அதனுடன் இதர பல சொத்துக்களும் இவ்வழக்கின் வாதிகளின் தாத்தாவான சுப்ரமணியன் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றும், மேற்படி சுப்ரமணியன் மற்றும் மீனாட்சி தம்பதியினருக்கு கும்பேஸ்வரன்–1, K.S.வெங்கடேஷ்வரன் என்ற வெங்கட்ராமன்–2, கிருஷ்ணமூர்த்தி–3, ராமச்சந்திரன் 4 ஆகிய நான்கு ஆண் மக்களும், ராஜாத்தி–5, சரஸ்வதி–6 ஆகிய இரண்டு பெண்மக்களும் வாரிசுதாரர்களாக உள்ளதாகவும், அதில் கும்பேஸ்வரன் என்பவர் முன்னதாகவே காலமாகி விட்டதாகவும், அதன்பின்னிட்டு சுப்ரமணியனுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துகளை பொறுத்து காலமான கும்பேஸ்வரனின் வாரிசுதாரர்கள், வாதிகளின் தகப்பனாரான K.S.வெங்கடேஷ்வரன் என்ற வெங்கட்ராமன், கிருஷ்ணமூர்த்தி, ராமசந்திரன் ஆகிய நால்வரும் சேர்ந்து 13.02.1964ம் தேதியில் ஒரு பாகப்பரிவினை ஆவணம் ஏற்படுத்திக்கொண்டதாகவும், மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் மூலம் தாவா வழக்குரை சொத்தானது ராமசந்திரனுக்கு C செட்டியூல் சொத்தாக ஒதுக்கப்பட்டதாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், ராமச்சந்திரன் மனநிலை பாதிக்கப்பட்டு திருமணம் எதுவும் செய்து கொள்ளாமலும், ஆவணங்கள் எதுவும் எழுதி வைக்காமல் காலமாகிவிட்டதாகவும்,

மேற்படி ராமச்சந்திரனின் சொத்துக்களானது அவருடைய வாரிசுதாரர்களுக்கு சென்றடைவதை தடுக்கவும், தாவா வழக்குரை சொத்தை K.S.வெங்கடேஷ்வரன் என்ற வெங்கட்ராமன், கிருஷ்ணமூர்த்தியும் அபகரித்து கொள்ள சதி செய்து மோசடியாக இதர வாரிசுதார்களை தவிர்த்து அவர்களர் இருவர் மட்டும் தாவா வழக்குரை சொத்தை அடைந்து கொண்டதாக பொய்யாக பிரஸ்தாபம் செய்து, அதன்மேல் கடந்த 02.03.2011ம் தேதி சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலக 1013/2011ன் ஆவணப்படி கிருஷ்ணமூர்த்தி தனது சகோதரரான K.S.வெங்கடேஷ்வரன் என்ற வெங்கட்ராமனுக்கு ஒரு பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதி கொடுத்திருப்பது போன்று ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளதாகவும், மேற்படி பாகபாத்திய விடுதலை பத்திரத்தினை எழுதி கொடுப்பதற்கு கிருஷ்ணமூர்த்திக்கு யாதொரு உரிமையோ, பாத்தியமோ கிடையாது என்றும், அதேபோல் பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தினை எழுதி பெற்றுக் கொள்வதற்கு K.S.வெங்கடேஷ்வரன் என்ற வெங்கட்ராமனுக்கு எவ்வித அருகதையும் கிடையாது என்றும், மேற்படி விடுதலை ஆவணமானது வாதிகளின் உரிமையையோ, பாத்தியத்தையோ எவ்வித்திலும் கட்டுப்படுத்தாது என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி K.S.வெங்கடேஷ்வரன் என்ற வெங்கட்ராமன் 1ம் பிரதிவாதிக்கு கடந்த 09.05.2019ம் தேதி சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 2225/2019ன் ஆவணப்படி இவ்வழக்குரை சொத்தினை தானசெட்டில்மெண்ட் ஆவணம் மூலம் இவ்வழக்கின் வாதிகளுக்குரிய பங்குபாக உரிமையினை மறைத்து மோசடி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளதாகவும், மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணமானது வாதிகளின் உரிமையையோ, அனுபவ பாத்தியத்தையோ எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

தாவா வழக்குரை சொத்தினை பொறுத்து மேற்படி K.S.வெங்கடேஷ்வரன் என்ற வெங்கட்ராமன், கிருஷ்ணமூர்த்தி மற்றும் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்ட வில்லங்கம் குறித்து தெரிந்து கொண்ட இவ்வழக்கின் வாதிகள் அவர்களது வழக்கறிஞர் மூலமாக இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி மற்றும் K.S.வெங்கடேஷ்வரன் என்ற வெங்கட்ராமன் ஆகியோர்களுக்கு கடந்த 14.12.2019ம்

தேதியில் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பி எச்சரிக்கை செய்துள்ளதாகவும், ஆனால் அதனை இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி பெற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்ப செய்து விட்டு, கடந்த 11.01.2020ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பியதாக பொய்யுரைத்து அவருக்கே தெரிந்த உட்காரணங்களுக்காக இவ்வழக்கின் வாதிகள் மீது இந்நீதிமன்றத்தில் பெயரளவிற்கு மட்டும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி OS.No.3/2020 வழக்கு தாக்கல் செய்துள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னிட்டு, இவ்வழக்கின் வாதிகள் அவர்களது வழக்கறிஞர்கள் மூலம் வழக்கில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்த நிலையில், வழக்கில் விசாரணைக்கென பல்வேறு வாய்தாக்கள் ஏற்பட்டு இறுதியாக கடந்த 09.06.2023ம் தேதியில் மேற்படி வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாகவும், தற்போது தாவா வழக்குரை சொத்துக்களில் உரிமை மூலமும், சுவாதீனமும் இவ்வழக்கு வாதிகளை உள்ளடக்கிய கூட்டுகுடும்ப உறுப்பினர்கள் அனைவரிடமும் இருந்து வருவதாகவும், அதில் தற்போது இலட்சுமணன் அவர்கள் காலமாகிவிட்டதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னிட்டு இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி வேண்டுமென்றே அவரது வழக்கை தள்ளுபடிக்கு விட்டுவிட்டு தாவா வழக்குரை சொத்தினை 3ம் நபர்களுக்கு விற்பனை செய்திட முயற்சிகள் மேற்கொண்டு வந்தமையால் இவ்வழக்கின் 2ம் வாதி இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 12.06.2023ம் தேதி தாவா மனு வழங்கியுள்ள நிலையில், இவ்வழக்கில் 4ம் பிரதிவாதி மேற்படி தாவா மனுவின் மீது எவ்வித விசாரணை மேற்கொள்ளாமல் ஒருதலைபட்சமாக செயல்பட்டு, கடந்த 15.06.2023ம் தேதியில் இவ்வழக்கின் 1,2 பிரதிவாதிகள் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதிக்கு தாவா வழக்குரை சொத்தின் ஒரு பகுதியான 1,500 சதுரடியுள்ள மனையினை மட்டும் எழுதிக் கொடுத்திருப்பதாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தினை சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலக 3477/2023ன் ஆவணமாக பதிவு செய்துள்ளதாகவும், இவ்வழக்கின் 4ம் பிரதிவாதியின் செயல்பாடானது சட்ட விரோதமானது என்று சுட்டிக்காட்டியும், இவ்வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகளால் ஏற்படுத்தி கொள்ளப்பட்டிருக்கும் மேற்படி கிரைய ஆவணத்தினை அவர்களாகவே ரத்து செய்து கொடுக்க கேட்டு இவ்வழக்கின்

வாதிகள் அவர்களது வழக்கறிஞர்கள் மூலம் கடந்த 10.07.2023ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றினை அனுப்பியதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு பிரதிவாதிகள் மேற்படி அறிவிப்பினை பெற்று கொண்ட பின்னரும் அவர்களால் ஏற்படுத்தி கொள்ளப்பட்டிருக்கும் கிரையப் பத்திரத்தினை ரத்து செய்யாமல் இருந்து வருவதாகவும், மேற்படி 15.06.2023ம் தேதியிட்ட கிரைய ஆவணமானது இவ்வழக்கின் வாதிகளின் உரிமையையோ அனுபவத்தையோ, பாத்தியத்தையோ எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும், அவைகள் செல்லதகுந்த ஆவணம் அல்ல என்றும், அதனால் மேற்படி 1 முதல் 3 பிரதிவாதிகள் மோசடியாக ஏற்படுத்தியுள்ள ஆவணத்தினை இல்லா நிலையது பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்குரை சொத்தினை பொறுத்து இவ்வழக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் ஒத்தி, ஈடு, கிரையம் போன்ற வில்லங்கங்களை ஏற்படுத்த முயற்சிப்பார்களாயின், அவைகளை இவ்வழக்கின் 4ம் பிரதிவாதி பதிவு செய்திட கூடாதென ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

3. <u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்.</u>

வாதியானவர் பொய்யான சங்கதிகளைக் கூறி தாவா தாக்கல் செய்துள்ளதாகவும், வாதிகள் தரப்பில் எடுத்துரைக்கப்படும் பொருண்மைகள் குறித்து இவ்வழக்கு வாதிகளே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் என்றும், இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு வாதிகளுக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும், இவ்வழக்கு வாதிகள் தாவா சொத்தின் கூட்டு பங்குரிமையர் இல்லை என்றும், இவ்வழக்கானது காலவரையறைச்சட்டம் கட்டளை 59ன் கீழ் தடைப்பட்டுள்ளதாகவும், தாவா தரப்பினர்களுக்கிடையேயான உறவுமுறை குறித்து ஒப்புக்கொள்வதாகவும், வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் தாத்தா சுப்பிரமணியன் இறந்த பின்னிட்டு, அவரது ஆண் வாரிசுகளான கும்பேஸ்வரின் வாரிசுகள், K.S.வெங்கடேஷ்வரன் என்ற வெங்கட்ராமன், கிருஷ்ணமூர்த்தி மற்றும் ராமச்சந்திரன் ஆகியோர்கள் 13.02.1964ம் தேதியில் தங்களது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டதாகவும், அதில் C அட்டவணை சொத்தானது ராமச்சந்திரன்

என்பவருக்கு ஒதுக்கப்பட்டதாகவும், ராமச்சந்திரன் திருமணமாகாமல் வாரிசுகள் இன்றி மனநிலை பாதிக்கப்பட்டு எவ்வித ஆவணங்களும் ஏற்படுத்தாமல் காலமாகிவிட்டதாக வாதிகள் தரப்பில் எடுத்துரைக்கும் பொருண்மைகளானது ஒப்புக்கொள்ளப்படுவதாக பிரதிவாதிகள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

3.1) வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் தந்தையான வெங்கடேஷ்வரன் என்கின்ற வெங்கட்ராமன் 09.05.2019 தேதியில் ஏற்படுத்திக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்தானது முழுமையாக இவ்வழக்கு 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாகவும், ஆதியில் தாவா சொத்தானது 1ம் பிரதிவாதியின் தந்தையின் சகோதரரான கிருஷ்ணமூர்த்தி மற்றும் ராமச்சந்திரன் ஆகியோருக்கு 13.02.1964 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி பாத்தியப்பட்டதாகவும், மேற்படி பாகப்பிரிவினை பத்திரமானது வாதிகள், 1ம் பிரதிவாதியின் தந்தை வெங்கட்ராமன், அவரது சகோதரர்கள் ஆகியோருக்கிடையே ஏற்பட்டதாகவும், மேற்படி ராமச்சந்திரன் மனநிலை பாதிக்கப்பட்ட நபர் என்றும், தாவா சொத்தானது கிருஷ்ணமூர்த்தி மற்றும் ராமச்சந்திரனுக்கு ஒதுக்கப்பட்டதாகவும், மேற்படியார்கள் தாவா சொத்து குறித்து பாகப்பிரிவினை எதுவும் ஏற்படுத்திக் கொள்ளாமல் கூட்டாக அனுபவித்து வந்ததாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

3.2) மேலும், ராமச்சந்திரன் மனநிலை பாதிக்கப்பட்டு கடந்த 2011ம் வருடத்தில் திருமணமாகாமல் எவ்வித ஆவணமும் ஏற்படுத்தாமல் காலமாகிவிட்டதாகவும், மேற்படி ராமச்சந்திரனின் இறப்பிற்கு பின்னிட்டு தாவா சொத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட பேர்பாதி பாத்தியத்தில் வாரிசுரிமை அடிப்படையில் அவரது சகோதரர்களான வெங்கடேஷ்வரன் (எ) வெங்கட்ராமன் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்கு பாத்தியப்பட்டதாகவும், ராமச்சந்திரன் இறப்பிற்கு பின்னிட்டு, வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் தந்தை வெங்கடேஷ்வரன் (எ) வெங்கட்ராமன் என்பவருக்கு தாவா சொத்தின் கூட்டுப்பங்குரிமையர் என்ற அடிப்படையில் 1/4 பங்கு பாத்தியம் என்றும், கிருஷ்ணமூர்த்திக்கு 3/4 பங்கு பாத்தியம் என்றும், தாவா சொத்தைப் பொறுத்து மேற்படியார்கள் எவ்வித பாகப்பிரிவினையும் ஏற்படுத்திக் கொள்ளாமல் கூட்டாக அனுபவித்து வந்ததாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

3.3) மேலும், பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தில் கிருஷ்ணமூர்த்தி தனக்கு

பாத்தியப்பட்ட 3/4 பங்கு உரிமை பொறுத்து 02.03.2011 தேதியில் 1ம் பிரதிவாதியின் தந்தையான வெங்கடேஷ்வரன் (எ) வெங்கட்ராமன் என்பவருக்கு 02.03.2011 தேதியில் பதிவு செய்யப்பட்ட பாகபாத்திய விடுதலைப் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்ததாகவும், மேற்படி தேதி முதல் 1ம் பிரதிவாதியின் தந்தை வெங்கடேஷ்வரன் (எ) வெங்கட்ராமன் தாவா சொத்தின் முழு உரிமையாளர் என்ற முறையில் தாவா சொத்திற்கான சொத்து வரிகளை அவரது பெயரில் செலுத்தி சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்ததாகவும், இவ்வாறான சூழ்நிலையில் 1ம் வாதியானவர் தாவா சொத்து அல்லாமல் இதர சொத்துக்கள் குறித்து இவ்வழக்கு 1ம் பிரதிவாதி, அவரது தந்தை மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் கோரி மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேனியில் தாவா தாக்கல் செய்து தற்போது வரை நிலுவையில் இருந்து வருவதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

3.4) மேலும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதியின் தந்தை வெங்கடேஷ்வரன் (எ) வெங்கட்ராமன் 1ம் பிரதிவாதியின் மீதிருந்த அன்பின் காரணமாகவும், அவரை கவனித்துக் கொண்டதன் பேரிலும் 09.05.2019 தேதியில் தாவா சொத்து குறித்து ஒரு பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ஏற்படுத்தியதாகவும், மேற்படி பத்திரத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதியானவர் தாவா சொத்தின் முழு உரிமையாளர் என்ற அடிப்படையில் அதன் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாகவும், 1ம் பிரதிவாதியின் தந்தை அவரது ஆயுட்காலம் வரை அல்லது அவர் விரும்பும்வரை தாவா சொத்தில் வசிக்க 1ம் பிரதிவாதியானவர் அனுமதித்துள்ளதாகவும், வாய்மொழி அனுமதியின் அடிப்படையில் தாவா 1ம் பிரதிவாதியின் தந்தை தாவா சொத்தில் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

3.5) மேலும், பிரதிவாதிகள் தரப்பில் தாவா வாதிகள் இவ்வழக்கு பிரதிவாதியின் சகோதர சகோதரிகள் என்றும், மேற்படியார்கள் வெங்கடேஷ்வரன் (எ) வெங்கட்ராமனின் மக்கள் என்றும், இவ்வழக்கு வாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், தாவா 1ம் பிரதிவாதியே 1லக்க சொத்தின் உரிமையாளர் என்றும், 18.10.2019ம் தேதியில் பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு வந்து தாவா சொத்திலிருந்து பிரதிவாதியின் தந்தையை வெளியேற்ற முயன்றதாகவும், தாவா

சொத்தானது குடும்ப சொத்து என்றும், அதில் தங்களுக்கும் பங்கு உண்டு என்று கூறி 1ம் பிரதிவாதியின் சுவாதீன அனுபவத்தை இடையூறு செய்ய முயற்சி செய்து வருவதாகவும், அச்சமயத்தில், பிரதிவாதிகளின் உற்றார், உறவினர்கள் துணையுடன் வாதிகளின் நடவடிக்கைகளானது தடுக்கப்பட்டதாகவும், இது குறித்து பிரதிவாதிகளுக்கு தெரியவந்தவுடன் பிரதிவாதிகள் 20.10.2019 தேதியில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், போலீசார் விசாரணை செய்தததில் தாவா வாதிகள் தங்களது தந்தையிடம் மன்னிப்பு கேட்டு தாவா சொத்தில் 1ம் பிரதிவாதியையோ அல்லது அவரது தந்தையின் சுவாதீன அனுபவத்தையோ இடையூறு செய்ய மாட்டோம் என்று உறுதியளித்ததாகவும், பின்னிட்டு, வாதிகள் தங்களது வழக்கறிஞர் மூலம் தாவா சொத்தில் தங்களுக்கும் உரிமை உள்ளதாகக் கூறி சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும், அதற்கு பிரதிவாதிகள் தரப்பில் 11.01.2020 தேதியில் பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

3.6) மேலும், பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி சம்பவத்திற்கு பின்னிட்டு வாதிகள் ஒரு மாதம் அமைதியாக இருந்ததாகவும், 23.12.2019 தேதியில் வாதிகள் மீண்டும் தாவா சொத்திற்கு வந்து 1ம் பிரதிவாதியின் சுவாதீன அனுபவத்தை இடையூறு செய்ய முயன்றதாகவும், மீண்டும் பிரதிவாதிகள் வாதிகளுக்கு எதிராக 26.12.2019 தேதியில் சின்னமனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், மேற்படி புகாரின் மீது போலீசார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் சிவில் நீதிமன்றத்தில் உரிய பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு அறிவுறுத்தியதாகவும், பின்னிட்டு 1ம் பிரதிவாதி இவ்வழக்கு வாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு எண். 3/2020 தாக்கல் செய்ததாகவும், அவ்வழக்கு விசாரணையின் போது இவ்வழக்கு 1ம் பிரதிவாதி சாட்சியம் அளிக்க முன்வராததால் அவ்வழக்கு தாவா வாதியின் வருகையின்மை காரணமாக தாவா தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், மேற்படி வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டி தாக்கல் செய்த இடைமனு எண். 2/2023 தற்போது வரை நிலுவையில் உள்ளதாகவும், இவ்வாறான சூழ்நிலையில், இவ்வழக்கு 1ம் பிரதிவாதி தாவா சொத்தின் ஒரு பகுதியை அதாவது தாவா முதல் அயிட்ட சொத்தை 3ம் பிரதிவாதிக்கு 15.06.2023 தேதியிட்ட கிரய பத்திரம் மூலம் விற்பனை செய்து 3ம் பிரதிவாதியானவர் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

3.7) மேலும், பிரதிவாதிகள் தரப்பில் கும்பேஸ்வரனின் வாரிசுகள், கிருஷ்ணசாமியின் வாரிசுகள், 1ம் பிரதிவாதியின் தந்தையின் சகோதரியான ராஜாத்தி ஆகியோர்களை தரப்பினர்களாக இவ்வழக்கில் சேர்க்கப்படாததால் இவ்வழக்கானது தேவையான மற்றும் அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கு பிரதிவாதிகள் 14.12.2019 தேதியில் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது தந்தைக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும், ஆகவே வாதிகள் மேற்படி அறிவிப்பு அனுப்பிய தேதியிலிருந்து விளம்புகை பரிகாரம் கோரி மூன்று வருடங்களுக்குள் தாவா தாக்கல் செய்யாமல் நான்கு வருடம் கழித்து தாவா தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கானது காலவரையறைச் சட்டம் கட்டளை 59ன் கீழ் தடைபட்டுள்ளதாகவும், முந்தைய ஆவணங்கள் குறித்து ரத்து செய்யவோ அல்லது நீக்கரவு செய்யவோ பரிகாரம் கோராமல் இவ்வழக்கு வாதிகள் தற்போது ஏற்பட்ட ஆவணங்கள் குறித்து கேள்வி எழுப்ப முடியாது என்றும், தாவாவிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், ஆகவே தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

3.8) தாவா சொத்தானது குடும்ப சொத்து அல்ல என்றும், தாவா சொத்தானது வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிகளின் தந்தைக்கு முழுமையாக பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதனால் தான் 1ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட முந்தைய பாகப்பிரிவினை வழக்கில் அச்சொத்தானது காண்பிக்கப்பட்டு அதில் எவ்வித பாகமும் வாதியால் கோரப்படவில்லை என்றும், அதன்பின்பு தான் 1ம் பிரதிவாதியின் தந்தை 1ம் பிரதிவாதிக்கு 09.05.2019ம் தேதியில் தாவா சொத்து குறித்து பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தி அதனடிப்படையில் முழு உரிமையாளர் என்ற உரிமையில் 1ம் பிரதிவாதியானவர் தாவா சொத்தின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாகவும், இவ்வழக்கு வாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், தாவா சொத்தைப் பொறுத்து வாதிகள் மூன்றாம் நபர்கள் என்றும், வாதிகள் எவ்வித சட்ட உரிமையும் இல்லாமல் இவ்வழக்கு பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பிரதிவாதிகளை மிரட்டி வருவதாகவும், உண்மை சங்கதிகளை மறைத்து தாவா தாக்கல் செய்துள்ளதால் தாவாவானது தள்ளுபடி செய்யவேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

4. வாதிகளின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து, இவ்வழக்கின் தீர்விற்காக 06.07.2024 அன்று கீழ்க்காணும் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| எழுவினா 1 | Whether the plaintiff's have filed the suit without seeking the relief of declaration of title is maintainable or not? |
| எழுவினா 2 | Whether the suit is barred by limitation? |
| எழுவினா 3 | Whether it is true that the 1st and 2nd defendant had frudulently executed the sale deed dated 15.06.2023 in favour of the 3rd defendant? |
| எழுவினா 4 | Whether the plaintiff's are entitled for declaration that declaring the sale deed dated 15.06.2023 is null and void? |
| எழுவினா 5 | Whether the mandatory injunction sought against the 4th defendant is maintainable? |
| எழுவினா 6 | Whether the plaintiff's are entitled for getting the relief of Mandatory injunction as prayed for? |
| எழுவினா 7 | What other reliefs are entitled to the plaintiffs? |

5. வாதிகள் தரப்பில் 2ம் வாதியான சாய்ராம் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 9 வரையிலான சான்றாவணங்களானது குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதியானவர் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. இவ்வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும் நீதியின் நலன் கருதியும் தாவா 1 முதல் 4 வரையிலான எழுவினாக்களானது ஒருசேர இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

| | |
|---|---|
| எழுவினா 1 | Whether the plaintiff's have filed the suit without seeking the relief of declaration of title is maintainable or not? |
| எழுவினா 2 | Whether the suit is barred by limitation? |
| எழுவினா 3 | Whether it is true that the 1st and 2nd defendant had frudulently executed the sale deed dated 15.06.2023 in favour of the 3rd defendant? |
| எழுவினா 4 | Whether the plaintiff's are entitled for declaration that declaring the sale deed dated 15.06.2023 is null and void? |

7. **வாதிகள் தரப்பு வாதம் யாதெனில்**, தாவா சொத்தானது வாதிகளின் தாத்தா சுப்ரமணியன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படியாருக்கு நான்கு ஆண்மக்கள் மற்றும் இரண்டு பெண் மக்கள் என்றும், சுப்ரமணியனின் ஆண் மக்கள் 13.12.1964 தேதியில் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினையில் தாவா சொத்தானது ராமச்சந்திரன் என்பவருக்கு C அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி ராமச்சந்திரன் திருமணம் ஆகாமல் வாரிசுகள் எதுவுமின்றி விருப்புறுதி ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் காலமாகிவிட்டதாகவும், மேற்படி சொத்தை 1ம் வாதியின் தந்தையும், கிருஷ்ணமூர்த்தியும் சதிசெய்து மோசடியாக இதர வாரிசுதாரர்களை விட்டு தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவா சொத்தை அனுபவித்து வந்ததாக் கூறி கிருஷ்ணமூர்த்தி 02.03.2011 தேதியில் 1ம் வாதியின் தந்தையான வெங்கடேஷ்வரன் (எ)வெங்கட்ராமனுக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட பாக பாத்திய விடுதலை பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாகவும், மேற்படி பாகபாத்திய விடுதலை பத்திரத்தின் அடிப்படையில் வாதியின் தந்தை இவ்வழக்கு 1ம் பிரதிவாதிக்கு 09.05.2019 தேதியில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாகவும், தாவா சொத்தானது கூட்டுக்குடும்ப சொத்து என்றும், இவ்வழக்கு பிரதிவாதிகள் கூட்டு பங்குரிமையாளர்கள் என்றும், தாவா சொத்தில் வாதிகளுக்குள்ள உரிமையை மறுத்து 1ம் பிரதிவாதி பெயரில் தானசெட்டில்மெண்ட் பத்திரமானது ஏற்பட்டுள்ளதாகவும், 1,2 பிரதிவாதிகள் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் படி தனக்கு பாத்தியப்பட்ட சொத்தின் ஒரு பகுதியைப் பொறுத்து இவ்வழக்கு 3ம் பிரதிவாதி பெயருக்கு 15.06.2023 தேதியில் கிரைய ஆவணமானது ஏற்படுத்தியுள்ளதாகவும், மேற்படி பத்திரமானது தாவா சொத்தில் வாதிகளுடைய உரிமையையோ, பாத்தியத்தையோ, அனுபவத்தையோ பாதிக்காது என்றும், ஆகவே 15.06.2023ம் தேதியிட்ட 3ம் பிரதிவாதி பெயரிலான கிரைய பத்திரமானது செல்லத்தகதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளதாக வாதிடப்பட்டது.

8. இவ்வழக்கு **பிரதிவாதிகள் தரப்பு வாதம் யாதெனில்**, 13.02.1964 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் படி தாவா சொத்தானது வாதியின் தந்தையின் சகோதரர்களான கிருஷ்ணமூர்த்தி மற்றும் ராமச்சந்திரன் ஆகியோர்களுக்கு

ஒதுக்கப்பட்டதாகவும், மேற்படி ராமச்சந்திரன் மனநிலை பாதிக்கப்பட்ட நபர் என்றும், மேற்படி ராமச்சந்திரன் தாவா சொத்து குறித்து எவ்வித ஆவணமும் ஏற்படுத்தாமல் திருமணம் ஆகாமல் வாரிசு எதுவுமின்றி கடந்த 2011ம் வருடத்தில் காலமாகிவிட்டதாகவும், ராமசந்திரனுக்கு பாத்தியப்பட்ட பேர்பாதி சொத்திற்கு 1ம் வாதியின் தந்தையான வெங்கடேஷ்வரன் (எ)வெங்கட்ராமன் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் வாரிசுகள் என்றும், தாவா சொத்தில் கிருஷ்ணமூர்த்தி தனக்கு பாத்தியப்பட்ட 3/4 பங்கைப் பொறுத்து 1ம் வாதியின் தந்தையான வெங்கடேஷ்வரன் (எ)வெங்கட்ராமனுக்கு கடந்த 02.03.2011 தேதியில் பதிவு செய்யப்பட்ட பாகபாத்திய விடுதலைப் பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாகவும், மேற்படி வெங்கடேஷ்வரன் (எ)வெங்கட்ராமன் தாவா சொத்தின் முழு உரிமையாளராக அனுபவித்து வந்த நிலையில் தாவா சொத்து குறித்து இவ்வழக்கு 1ம் பிரதிவாதிக்கு 09.05.2019 தேதியில் பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாகவும், தாவா சொத்தில் பிரதிவாதிகள் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாகவும், தாவா சொத்தில் வாதிகள் தங்களுக்கும் உரிமை உண்டு என்று கடந்த 18.10.2019 மற்றும் 23.12.2019 தேதிகளில் 1,2 பிரதிவாதிகளின் சுவாதீனத்தை இடையூறு செய்ய முயன்றதாகவும், தாவா சொத்தில் வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், தாவா சொத்தில் பிரதிவாதிகளின் சுவாதீனத்தை இடையூறு செய்யக்கூடாது என வாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு எண். 3/2020 தாக்கல் செய்துள்ளதாகவும், இவ்வழக்கு வாதிகள் 14.12.2019 தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ள நிலையில், தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோரப்படாததாலும், தாவா சொத்தில் வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லாத காரணத்தில் தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

9. இவ்வழக்கில் 2ம் வாதியான சாய்ராம் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, 02.03.2011 தேதியிட்ட வெங்கட்ராமன் (எ) வெங்கடேசன் என்பவர் பெயரிலான பாகப்பாத்திய விடுதலை பத்திரமானது வா.சா.ஆ 1 ஆகவும், 09.05.2019 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரிலான தாவா சொத்து குறித்த தான செட்டில்மெண்ட் பத்திரமானது வா.சா.ஆ 2 ஆகவும், 14.12.2019ம் தேதியிட்ட இவ்வழக்கு வாதிகளால் தாவா 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பானது வா.சா.ஆ 3 ஆகவும், மேற்படி

அறிவிப்பானது திருப்பப்பட்டதற்கான அஞ்சல உறையானது வா.சா.ஆ.4 ஆகவும், தாவா சொத்து குறித்து செய்தித்தாளில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பானது வா.சா.ஆ 5 ஆகவும், 15.06.2023 ம் தேதியிட்ட மணிமாறன் என்பவர் பெயரிலான கிரையபத்திரத்தின் சான்றிட்ட நகலானது வா.சா.ஆ 6 ஆகவும், அசல் வழக்கு எண். 3/2020 குறித்த வழக்குரையானது வா.சா.ஆ.7 ஆகவும், 10.07.2023 ம் தேதியிட்ட இவ்வழக்கு வாதிகளால் வழங்கப்பட்ட சட்ட அறிவிப்பானது வா.சா.ஆ.8 ஆகவும், 16.02.1964 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகலானது வா.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

10. **இவ்வழக்கில் இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்படும் பொருண்மைகள் யாதெனில்,** தாவா சொத்தானது வாதிகளின் பாட்டனாரான சுப்ரமணியன் என்பருக்கு பாத்தியப்பட்டது குறித்தும், மேற்படி சுப்ரமணியத்திற்கு கிருஷ்ணமூர்த்தி, வெங்கடேஷ்வரன் (எ)வெங்கட்ராமன், ராமச்சந்திரன், கும்பேஸ்வரன், ராஜாத்தி, சரஸ்வதி ஆகியோர்கள் வாரிசுகள் என்பது குறித்தும், மேற்படி கும்பேஸ்வரன் முன்னதாகவே காலமாகிவிட்டது குறித்தும், சுப்ரமணியத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் குறித்து அவரது இதர ஆண் வாரிசுதாரர்களான கிருஷ்ணமூர்த்தி, ராமச்சந்திரன், வெங்கடேஷ்வரன்(எ)வெங்கட்ராமன் மற்றும் இறந்துபோன கும்பேஸ்வரனின் வாரிசுகள் 13.02.1964 தேதியில் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரமானது ஏற்படுத்திக் கொண்டது குறித்தும், அதில் B அட்டவணை சொத்தானது கிருஷ்ணமூர்த்திக்கும், C அட்டவணை சொத்தானது இராமசந்திரன் என்பவருக்கு ஒதுக்கப்பட்டது குறித்தும், மேற்படி ராமச்சந்திரன் மனநிலை பாதிக்கப்பட்டு திருமணம் ஆகாமல் எவ்வித ஆவணமும் ஏற்படுத்தாமல் காலமாகிவிட்டது குறித்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 58–ன் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மைகளானது நிரூபிக்கப்படவேண்டிய அவசியமில்லை.

11. **இவ்வழக்கில் பிரச்சனைக்குரிய பொருண்மைகள் யாதெனில்,** தாவாச்சொத்தானது பூர்வீகச்சொத்து என்றும், பிறப்பின் அடிப்படையில் தாவா சொத்தில் வாதிகளுக்கும் உரிமை உள்ளது என்றும், ராமச்சந்திரனின் இதர வாரிசுகளை தவிர்த்து அவருக்குப்பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது சகோதரர்களான 1 ம்வாதியின் தந்தை

மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் தங்களுக்குப் பாத்தியப்பட்டதாக கூறி 02.03.2011–ம்தேதியில் பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் மற்றும் 09.05.2019–ம் தேதியில் 1ம் பிரதிவாதி பெயரிலான தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்திக்கொண்டதாகவும், மேற்படி பத்திரங்களானது தாவாச்சொத்தில் வாதிகளுக்குள்ள உரிமைகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்று எடுத்துரைத்துள்ள நிலையில், 15.06.2023ம் தேதியிட்ட தாவா 1ம் லக்க சொத்து குறித்து வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரமானது அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா? என்பது குறித்து தீர்வு காணவேண்டியது அவசியமாகிறது.

12. இவ்வழக்கில் தாவா சொத்து குறித்து வாதிகள் விளம்புகை பரிகாரம் கோரியுள்ள நிலையில், தாவா சொத்தில் வாதிகளுக்கான உரிமை மூலம் குறித்து இவ்வாதிகளே இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101ன் கீழ் தகுந்த சாட்சிய மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவர்களாவர். வா.சா.ஆ 1 ஐ பரிசீலனை செய்யும்போது வாதியின் தந்தையின் சகோதரரான கிருஷ்ணமூர்த்தி தாவா சொத்தில் தனக்கு பாத்தியப்பட்ட பாகம் குறித்து வாதியின் தந்தையான வெங்கடேஷ்வரன் என்பவருக்கு 02.03.2011ம் தேதியில் பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் ஏற்படுத்தியுள்ளது தெரியவருகிறது. வா.சா.ஆ 2 ஐ பரிசீலனை செய்யும்போது 09.05.2019ல் தேதியில் வாதிகளின் தந்தையான வெங்கடேஷ்வரன் தாவா சொத்துக்களை தனது மகனான 1ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தியுள்ளது தெரியவருகிறது. வா.சா.ஆ 6 ஐ பரிசீலனை செய்யும்போது 15.06.2023ம் தேதியில் 1ம் பிரதிவாதியானவர் வா.சா.ஆ 2ன்படி அவருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் ஒரு பகுதியை தாவா 3ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளது தெரியவருகிறது.

13. இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் தாவா சொத்தானது தங்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்று எடுத்துரைக்கப்படும் நிலையில், தங்களுக்கும் அதில் பிறப்பின் அடிப்படையில் உரிமையுள்ளதாக கூறும் நிலையில், தாவா சொத்தானது 3 தலைமுறைகளுக்கும் மேற்பட்டு பாகப்பிரிவினையின்றி கூட்டுக்குடும்ப சொத்தாக பிரிபடாமல் அனுபவிக்கப்பட்டு வந்ததாக எவ்வித ஆவணமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும், இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் 1ம்

வாதியானவர் தாவாச்சொத்தினை தவிர்த்து இதர சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி, அவரது தந்தை மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக மாண்புமிகு மாவட்ட நீதிமன்றம், தேனியில் அசல்வழக்கு எண்.33/2018 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதாகவும், தாவாச்சொத்திற்கு வெங்கடேஷ்வரன் முழுஉரிமையாளர் என்பதால் தான் இச்சொத்தானது அசல்வழக்கு எண். 33/2018 ல் தாவாச்சொத்தாக காண்பிக்கப்படவில்லை என்றும் வாதிடப்பட்டது.

14. இவ்வழக்கில் இருதரப்பிலும் அசல்வழக்கு எண்.33/2018-ன் வழக்குரையானது இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருப்பினும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் " 1ம் வாதி ரமா மாண்புமிகு தேனி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 33/2018 ஆக பாகப்பிரிவினை வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை வழக்கில் நானும் ஒரு பிரதிவாதி என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 33/2018 வழக்கில் அசல் வழக்கு 3/2020 வழக்கின் வழக்கு சொத்து காண்பிக்கவில்லை என்றால் சரிதான்." என்று சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1 குறுக்குவிசாரணை சாட்சியத்திலிருந்து அசல்வழக்கு எண்.33/2018-ல் அசல் வழக்கு எண்.3/2020 ல் உள்ள சொத்தானது, அவ்வழக்கு தாவாச்சொத்தாக காண்பிக்கப்படவில்லை என்பது தெரியவருகிறது. இவ்வழக்கு பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தானது பூர்வீக சொத்து என்று எடுத்துரைக்கப்படும் நிலையில், அசல் வழக்கு எண். 33/2018 ல் தாவா சொத்து குறித்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரப்படாததற்கு பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை.

15. மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் " இந்த வழக்கையும் அசல் வழக்கு 3/2020 வழக்கையும் நான் எந்த அடிப்படையில் வாதம் மற்றும் எதிர்வாதம் செய்து நடத்தி வருகிறேன் என்றால் ராமசந்திரனின் வாரிசுகளின் வாரிசு என்ற அடிப்படையில் எனது உரிமையைப்பொறுத்து வழக்காடி வருகிறேன். ராமச்சந்திரன் வாரிசுகள் உயிருடன் இருக்கும்போது எனக்கு ராமச்சந்திரனின் சொத்துக்களில் எனக்கு உரிமை எதுவும் இல்லை என்றால் வாரிசுரிமைப்பற்றி சட்டநிலைப்பற்றி எனக்கு தெரியாது." என்று சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கு வாதிகள் தாவா சொத்தில் தங்களுக்கும் உரிமை உள்ளதாக எடுத்துரைத்து, 02.03.2011 ம் தேதியிட்ட

பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் மற்றும் 09.05.2019 ம் தேதிய தான செட்டில்மெண்ட் பத்திரம் ஆகியவைகள் குறித்து ஆட்சேபனை செய்யும் நிலையில், வாதிகளின் தந்தையின் சகோதரரான ராமச்சந்திரனுக்கு இவ்வழக்கு வாதிகள் வாரிசுதாரர்களாக வருவார்களா? என்பது குறித்து தீர்வு காணவேண்டியது அவசியமாகிறது.

16. மேலும், 2011 ம் வருடம் ராமச்சந்திரன் திருமணமாகாமல் வாரிசுகள் எதுவுமின்றி காலமாகிவிட்டதாக இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி ராமச்சந்திரனின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழானது இரு தரப்பிலும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருப்பினும், இருதரப்பிலும் ராமச்சந்திரனின் இறப்பு குறித்து எடுத்துரைக்கும் ஒப்புக்கொண்ட பொருண்மைகளை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. மேற்படி ராமச்சந்திரன் வாரிசுகள் எதுவுமின்றி காலமாகிவிட்டநிலையில், மேற்படியாருக்கு நேரடி வாரிசுகள் யாரும் இல்லாத நிலையில் இந்து வாரிசுமை சட்டம் பிரிவு 8 குறித்த அட்டவணையில் II–ல் அவருடன் பிறந்த உயிருடன் இருக்கும் சகோதர, சகோதரிகளே வாரிசாக வருவர். வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் "எனது தந்தை உயிருடன் உள்ளார் என்றால் சரிதான்." என்று சாட்சியமளித்துள்ளார். எனவே, ராமச்சந்திரனின் சகோதரரின் வாரிசுகளான இவ்வழக்கு வாதிகள் அவர்களது தந்தை உயிருடன் உள்ள நிலையில் இராமசந்திரனுக்கு வாரிசாக வரமாட்டார்கள். மேலும், மேற்படி ராமச்சந்திரன் இறப்பின் போது அவரது சகோதரிகள் உயிருடன் இருந்தார்களா என்பது குறித்து இவ்வழக்கில் இரு தரப்பிலும் எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை.

17. இவ்வழக்கில் 12.02.1964 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் குறித்தும், அதில் B அட்டவணை சொத்தானது கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கும், C அட்டவணை சொத்தானது ராமமூர்த்தி என்பவருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது குறித்தும், மேற்படி சொத்தில் இருவருக்கும் தலா பேர்பாதி பாத்தியம் என்பது குறித்தும் இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. வா.சா.ஆ 9 ஆக வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தை பரிசீலனை செய்யும் போது கிருஷ்ணமூர்த்தி என்பவர் 12.02.1964 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் தனக்கு ஒதுக்கப்பட்ட B அட்டவணை சொத்து முழுவதையும் 16.02.1964 ம் தேதியில் வா.சா.ஆ.9 ன் மூலம் தனது சகோதரரான இராமச்சந்திரன் என்பவருக்கு கிரையப்பத்திரம் ஏற்படுத்தியுள்ளார்.

18. மேற்படி வா.சா.ஆ 9 ஆன கிரைய பத்திரத்திற்கு பின்னிட்டு தாவா சொத்திற்கு ராமச்சந்திரன் என்பவரே முழு உரிமையாளர் ஆவார். மேலும் வா.சா.ஆ 9 ஆன கிரையப்பத்திரத்திற்கு பின்னிட்டு கிருஷ்ணமூர்த்திக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது. இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ 9 ஆன 16.02.1964 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் படி கிருஷ்ணமூர்த்தி தனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் உள்ள உரிமையை தனது சகோதரரான ராமச்சந்திரனுக்கு விற்றுள்ளபடியால் அச்சொத்து குறித்து வா.சா.ஆ 1 ஆன பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் ஏற்படுத்துவதற்கு கிருஷ்ணமூர்த்திக்கு எவ்வித உரிமையும் இல்லை என வாதிடப்பட்டது.

19. இரு தரப்பிலும் இறந்து போன ராமச்சந்திரனுக்கு உயிருடன் இருக்கும் அவரது சகோதரர்களான கிருஷ்ணமூர்த்தி, வெங்கடேஷ்வரன் ஆகியோர்கள் மட்டுமே வாரிசுகள் என்று எடுத்துரைத்துள்ள நிலையில், தாவா சொத்துக்களில் மேற்படியார்களுக்கு தலா பேர்பாதி பாத்தியம் என்று தெரியவருகிறது. இவ்வாறான சூழ்நிலையில், மேற்படி கிருஷ்ணமூர்த்தி வா.சா.ஆ 9 ன் மூலம் விற்ற சொத்தையும், ராமச்சந்திரனின் 2 ம் நிலை வாரிசு என்ற முறையில் கிடைக்கப்பெற்ற சொத்தையும் சேர்த்து வா.சா.ஆ 1 ஆன 02.03.2011 ம் தேதிய பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

20. வா.சா.ஆ 1 ஆன பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தில் மேற்கூறிய வாசகம் இருப்பினும், கிருஷ்ணமூர்த்திக்கு ராமச்சந்திரன் இறந்ததன் பேரில் வாரிசுரிமை அடிப்படையில் எவ்வளவு பாத்தியம் உள்ளதோ அது குறித்து தான் அவர் பாகப்பாத்திய விடுதலைப்பத்திரத்தை ஏற்படுத்த முடியும். மேற்படி வா.சா.ஆ 1 ஆன 02.03.2011 ம் தேதியிட்ட பாகப்பாத்திய விடுதலைப்பத்திரமானது ரத்து செய்யப்படாமல் நிலுவையில் இருப்பது தெரியவருவதால், மேற்படி பத்திரமானது ராமச்சந்திரனுக்கு வாரிசுரிமை என்ற அடிப்படையில் கிருஷ்ணமூர்த்திக்கு கிடைத்த பாகத்தை மட்டுமே கட்டுப்படுத்தும். மேலும், கிருஷ்ணமூர்த்தி ஏற்கனவே விற்ற சொத்துக்களைப்பொருத்து மேற்படி பாகப்பாத்திய விடுதலைப்பத்திரமானது கட்டுப்படுத்தாது.

21. இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 02.03.2011 தேதியிட்ட அவர்களது தந்தை பெயரிலான பாகப்பாத்திய விடுதலை பத்திரம் மற்றும் 09.05.2019 ம் தேதியிட்ட 1 ம்

பிரதிவாதி பெயரிலான தான செட்டில்மெண்ட் பத்திரம் குறித்து ஆட்சேபிக்கப்படும் நிலையில், அது குறித்து விளம்புகை பரிகாரம் எதுவும் கோரப்படாததற்கு எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை. இது குறித்து வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் 02.03.2011ம் தேதியிட்ட பாகவிஸ்தி ஆவணத்திற்கு பிறகு எனது தகப்பனாரின் உடன்பிறந்தவர்களோ, கிருஷ்ணமூர்த்தியின் வாரிசுகளோ மேற்படி பாகவிஸ்தி ஆவணத்தை ஆட்சேபித்து வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்." என்று சாட்சியமளித்துள்ளார். மேற்படி வா.சா.1 சாட்சியின் சாட்சியத்திலிருந்து 02.03.2011ம் தேதியிட்ட பாகவிஸ்தி ஆவணம் மற்றும் 09.05.2019ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் குறித்து ஆட்சேபித்து வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று தெரியவருகிறது.

22. மேலும், இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் 2011ம் வருடத்திய பாகப்பாத்திய விடுதலை பத்திரம் குறித்து இவ்வழக்கு வாதிகளுக்கு 2019ம் வருடத்தில் தெரியவரும் நிலையில் இவ்வழக்கானது காலவரையறைச்சட்டம் கட்டளை 59 ன் கீழ் தடைப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இது குறித்து வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் " 02.03.2011ம் தேதிய பாகவிஸ்தி ஆவணத்தை ஆட்சேபித்து நானோ, எனது சகோதரர்களோ வழக்கு தாக்கல் செய்தோமா என்றால் 2019ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தான் இந்த விபரம் தெரியவந்தது." என்று சாட்சியம் அளித்துள்ளார். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ 3 ஆன 14.12.2019ம் தேதியிட்ட சட்ட அறிவிப்பினை பரிசீலினை செய்யும் போது அதில் 02.03.2011 தேதியிட்ட வெங்கடேஷ்வரன் என்பவர் பெயரிலான பாகப்பாத்திய விடுதலைப்பத்திரமானது மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ள நிலையில், மேற்படி ஆவணம் குறித்து இவ்வழக்கு வாதிக்கு 2019ம் வருடத்தில் தெரியவரும் நிலையில், அது குறித்து மேற்படி பத்திரம் குறித்து விளம்புகை பரிகாரம் கோருவதற்கான காலவரையறையானது முடிவுற்ற நிலையில், இவ்வழக்கு வாதியானவர் 15.06.2023ம் தேதியிட்ட கிரைய பத்திரம் குறித்த எழுப்பும் ஆட்சேபனையானது ஏற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

23. இவ்வழக்கில் தாவா சொத்தில் வாதிகளுக்கான உரிமை மூலம் குறித்து எவ்வித ஆவணமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை, தாவா சொத்தில்

வாதிகளுக்கான உரிமை பாத்தியம் குறித்து எடுத்துரைத்து நீதிமன்ற கட்டணங்கள் சட்டம் பிரிவுகள் 25(a) அல்லது 25(b) யின் கீழ் உரிய கட்டணம் செலுத்தி வாதிகள் தரப்பில் தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோரப்படாததற்கு எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை. இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 15.06.2023ம் தேதியிட்ட கிரைய ஆவணமானது 1,2 பிரதிவாதிகளால் தாவா 1 லக்க சொத்து குறித்து 3ம் பிரதிவாதி பெயருக்கு மோசடியான ஏற்படுத்தப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது. மேற்படி 15.06.2023ம் தேதிய 3ம் பிரதிவாதி மணிமாறன் என்பவர் பெயரிலான கிரையப்பத்திரமானது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ 6யை 1ம் பிரதிவாதி மற்றும் அவரது மகன் இவ்வழக்கு பிரதிவாதிக்கு ஏற்படுத்தியுள்ளதும், அதில் தாவா 1ம் லக்க சொத்தான 09.05.2019ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் இவ்வழக்கு 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

24. தாவா சொத்து குறித்து 02.03.2011 மற்றும் 09.05.2019 தேதியிலேயே பாகப்பத்திய விடுதலைப்பத்திரம், தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தியுள்ள நிலையில், மேற்படி ஆவணங்கள் அடிப்படையில் வா.சா.ஆ 6ன் மூலம் 15.06.2023ம் தேதியில் 3ம் பிரதிவாதியின் பெயரில் கிரைய பத்திரமானது ஏற்படுத்தப்பட்டுள்ளதால், வா.சா.ஆ 6 ஆன 15.06.2023ம் தேதியிட்ட கிரைய பத்திரத்திற்கு முன் பத்திரங்கள் குறித்து எவ்வித பரிகாரமும் கோரப்படாதநிலையில், பின்னிட்டு ஏற்பட்ட வா.சா.ஆ 6 ஆனது செல்லத்தக்கதல்ல என்று தீர்வு காண்பது நீதியின் நலனுக்கு உகந்ததல்ல என்று இந்நீதிமன்ற தீர்வு காண்கிறது. மேலும், வாதிகள் தரப்பில் 15.06.2023ம் தேதியிட்ட கிரைய பத்திரமானது மோசடியானது என்று நிரூபிக்கப்படாதநிலையில், அவர்களது எழுத்துப்பூர்வமான வாதத்தில் கோடிட்டு காட்டப்பட்ட S.P.Chengalvaraya Naidu Vs Jagannath 1994 ( 1) SCC 1 என்ற முன்தீர்ப்புரையானது இவ்வழக்கின் தன்மைக்கு பொருந்துவதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

25. மேலே கண்ட சாட்சிய சான்றாவணங்களை ஒருங்கிணைத்து பரிசீலனை செய்யும்போது, வாதிகள் தரப்பில் தாவா சொத்தானது வாதிகளுக்கு பிறப்பின் அடிப்படையில் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்பது குறித்தும், தாவா சொத்தில்

வாதிகளுக்குள்ள உரிமை மூலம் குறித்து எடுத்துரைத்து விளம்புகை பரிகாரம் கோரப்படாத காரணத்தினாலும், 02.03.2011ம் தேதியிட்ட பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம், 09.05.2019ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரமானது வாதிகள் தரப்பில் ஆட்சேபிக்கப்படும்நிலையில், அது குறித்து விளம்புகை பரிகாரம் எதுவும் கோரப்படாமல் அதன் அடிப்படையில் கோரப்பட்ட 15.06.2023 தேதியிட்ட 3ம் பிரதிவாதியின் பெயரிலான கிரையப்பத்திரமானது செல்லத்தக்கதல்ல என்று கோரும் விளம்புகை பரிகாரமானது வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதாலும், வாதிகள் தரப்பில் 15.06.2023ம் தேதியிட்ட 3ம் பிரதிவாதி பெயரிலான கிரையப்பத்திரமானது மோசடியாக ஏற்படுத்தப்பட்டதாக கூறுவது குறித்து நிரூபிக்கப்படாத காரணத்தினாலும், தாவா சொத்து குறித்து வாதிகள் கோரும் 15.06.2023ம் தேதியிட்ட கிரையப்பத்திரமானது தாவா சொத்தில் வாதிகளுக்குரிய உரிமையினையும், அனுபவத்தையும் எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது, இல்லாநிலையது மற்றும் செல்லத்தக்கதல்ல என்றும் கோரும் விளம்புகை பரிகாரமானது வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, தாவா 1 முதல் 4 வரையிலான எழுவினாக்களை இவ்வழக்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காண்கிறது.

26. இவ்வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும் நீதியின் நலன் கருதியும் தாவா 5 மற்றும் 6 எழுவினாக்களானது ஒருசேர இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

| | |
|---|---|
| எழுவினா 5 | Whether the mandatory injunction sought against the 4th defendant is maintainable? |
| எழுவினா 6 | Whether the plaintiff's are entitled for getting the relief of Mandatory injunction as prayed for? |

27. இவ்வழக்கில் வாதிகள் தாவா 1,2 லக்க சொத்துக்களைப்பொறுத்து இவ்வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகளால் ஏற்படுத்தப்படும் ஒத்தி, கிரையம், ஈடு போன்ற வில்லங்கங்களை இவ்வழக்கு 4ம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு செய்யக்கூடாதென செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார்கள். இவ்வழக்கில் 15.06.2023ம் தேதியிட்ட 3ம் பிரதிவாதியின் பெயரிலான கிரையப்பத்திரமானது

இல்லாதநிலையது மற்றும் செல்லத்தக்கதல்ல என்று வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரமானது எழுவினாக்கள் 1 முதல் 4ன் மூலம் இவ்வழக்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு கண்டுள்ளபடியால், தாவா 1 ,2 லக்க சொத்துக்களைப்பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகளால் எவ்வித வில்லங்கங்களும் 4ம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு செய்யக்கூடாதென வாதிகள் கோரும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரமானது அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து தாவா எழுவினாக்கள் 5 மற்றும் 6 க்கு தீர்வு காண்கிறது.

எழுவினா 7 What other reliefs are entitled to the plaintiffs?

28. இவ்வழக்கில் எழுவினாக்கள் 1 முதல் 6 ஆனது விரிவான காரணங்கள் அடிப்படையில் வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதால், வேறு பரிகாரங்கள் எதுவும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, தாவா எழுவினா 7 க்கு தீர்வு காண்கிறது.

29. **முடிவாக,**

தாவா தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 20ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

PRAVEENA
Digitally signed by PRAVEENA
Date: 2026.07.20 18:27:34 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

**வாதி தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| வா.சா.1 | சாய்ராம் |

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | 02.03.2011 | கிருஷ்ணமூர்த்தி என்பவர் வெங்கடேஷ்வரன் (எ) வெங்கட்ராமன் என்பவருக்கு எழுதிக் கொடுத்த பாகபாத்திய விடுதலை பத்திரம்– சான்றிட்ட நகல் |
| 2 | வா.சா.ஆ.2 | 09.05.2019 | வெங்கடேஷ்வரன் (எ) வெங்கட்ராமன் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் –சான்றிட்ட நகல் |
| 3 | வா.சா.ஆ.3 | 14.12.2019 | வாதிகள் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு |
| 4 | வா.சா.ஆ.4 | -- | 1ம் பிரதிவாதியால் பெறப்படாமல் திருப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு குறித்த தபால் உறை – அசல் |
| 5 | வா.சா.ஆ.5 | 09.05.2019 | வாதிகள் தரப்பில் வெளியிடப்பட்ட பொதுஅறிவிப்பு – அசல் |
| 6 | வா.சா.ஆ.6 | 15.06.2023 | 1,2 பிரதிவாதிகள், தாவா 3ம் பிரதிவாதியான மணிமாறன் என்பவருக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரைய பத்திரம் – சான்றிட்ட நகல் |
| 7 | வா.சா.ஆ.7 | -- | அசல் வழக்கு எண். 3/2020ன் பிராது அலுவலக நகல் |
| 8 | வா.சா.ஆ.8 | 10.07.2023 | வாதிகள் தரப்பில் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு –நகல் |
| 9 | வா.சா.ஆ.9 | 16.02.1964 | ராமச்சந்திரன் பெயரிலான கிரைய பத்திரம் – சான்றிட்ட நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி</u>

| | |
|---|---|
| பி.சா.1 | முத்துக்கிருஷ்ணன் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை.

PRAVEENA Digitally signed by PRAVEENA Date: 2026.07.20 18:27:40 +0300

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

உத்தமபாளையம்.